Karur Vysya Bank
Smart way to bank

# THE KARUR VYSYA BANK LIMITED

Registered & Central Office, No. 20, Erode Road, Vadivel Nagar, L.N.S., Karur – 639002
[CIN No: L65110TN1916PLC001295]
[e-mail:kvb_sig@kvbmail.com] [Website: www.kvb.co.in]
[Tel No: 04324-269441] [Fax No: 04324-225700]

## அறிவிப்பு

## காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் 103வது வருடாந்திர மகாசபை கூட்டம்

நிகழும் 2022 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 03ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணி அளவில் மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு வங்கியின் 103வது வருடாந்திர மகாசபை கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும் என்பதை வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்திய அரசின் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகமும் (MCA), இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியமும் (SEBI) வெளியிட்டுள்ள பல்வேறு சுற்றறிக்கைகளுக்கு இணங்க (சுற்றறிக்கைகள் விவரம்: Ministry of Corporate Affairs (MCA) Circulars Nos. 20/2022 dated May 05, 2022, 02/2021 read with 20/2020 dated 05.05.2020, 02/2021 dated 13.01.2021, 19/2011 dated 08.12.2021 and 21/2021 dated 14.12.2021; SEBI Circular Nos. SEBI/HO/CFD/CMD1/CIR/P/2022/62 dated 13.05.2022) 103வது மகாசபை கூட்ட அறிவிப்பும் 2021-22ஆம் நிதி ஆண்டின் ஆண்டு அறிக்கையும் மின்னஞ்சல் முகவரியினை வங்கியிடமோ, முதலீட்டு பங்கேற்பாளரிடமோ (Depository Participant), வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடமோ (Registrar & Transfer Agent) பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் 08.07.2022 அன்று தரவிறக்கம் செய்யப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மின்னஞ்சல் மூலமாக 12.07.2022 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 103வது மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை ஆகியவற்றை வங்கியின் இணைய தளத்திலும் (https://www.kvb.co.in/investor-corner/annual-general-meeting/), தேசிய பங்குச் சந்தை (NSE - www.nseindia.com) மற்றும் தேசிய பங்குகள் வைப்பு நிறுவனம் (NSDL - https://www.evoting.nsdl.com) ஆகியவற்றின் இணையதளங்களிலும் உறுப்பினர்கள் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வங்கியின் உறுப்பினர்கள் காணொலி காட்சி வாயிலாக மட்டுமே மகாசபை கூட்டத்தில் பங்கேற்க முடியும். மகாசபை கூட்டத்தில் பங்கெடுப்பது தொடர்பான நெறிமுறைகள் மகாசபை கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. காணொலி காட்சி வாயிலாக பங்கேற்கும் உறுப்பினர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் நிறுமச்சட்டம் 2013 பிரிவு 103ன் படி மகாசபை கூட்டம் நடத்துவதற்கு "போதுமான அளவில் உறுப்பினர்கள் பங்கேற்பு" (Quorum) குறித்து கணக்கிடப்படும்.

**வங்கி பதிவேடுகள் மூடப்படும் தேதிகள் குறித்த விவரம் (Dates of Book Closure) :**

நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் படியும் மேலும்இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015) –ன் 42வதுகட்டுப்பாட்டின் படியும், வங்கியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்றுபுத்தகம் ஆகியவை 21.07.2022 முதல் 03.08.2022 வரை மூடப்பட்டு இருக்கும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மின் வாக்களிப்பு (E-VOTING) முறை குறித்த விவரங்கள் :**

நிறுமச் சட்டம், 2013–ன் பிரிவு 108, நிறுமங்கள் நிர்வாகம் மற்றும் மேலாண்மை விதிகள், 2014–ன் விதி எண் 20 மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR, 2015) –ன் 44வது கட்டுப்பாடு ஆகியவற்றுக்கும் மேலும் இவைகளின் திருத்தங்களுக்கும் இணங்க, பங்குகளை மின்னணு பங்குகளாகவும் (Demat Shares) மற்றும் பங்குப்பத்திரங்களாகவும் (Physical Shares) வைத்துள்ள அனைத்து உறுப்பினர்களும் மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்களுக்குமோ அல்லது ஏதேனும் குறிப்பிட்ட தீர்மானத்திற்குமோ தங்களின் வாக்கு அளிக்கும் உரிமையை பயன்படுத்த தொலைதூர மின் வாக்களிப்பு வசதியினை (remote e-voting) வங்கி ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

தொலைதூர மின்–வாக்களிப்பு வசதியினை, தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக வங்கி ஏற்பாடு செய்துள்ளது. வங்கியின் உறுப்பினர் பதிவேடு (Register of Members) அல்லது வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர் (RTA)/ முதலீட்டு பங்கேற்பாளர் (Depository Participant) ஆகியோரால் நிர்வகிக்கப்படும் உறுப்பினர் உரிமை பதிவேடு (Register of Beneficial Owners) ஆகியவற்றில் 27.07.2022–ம் நாளன்று அலுவல் நேர முடிவில் பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தொலைதூர மின்–வாக்களிப்பு வசதி மற்றும் மகாசபை கூட்டத்தில் மின்–வாக்களிப்பு வசதி ஆகியவற்றை பயன்படுத்தி வாக்கு அளிக்கும் உரிமை பெற்றவர்களாவர். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையானது https://www.evoting.nsdl.com என்ற இணையதள முகவரியில் பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும் :

| | | |
|---|---|---|
| தொலைதூர மின்னணு வாக்களிப்பு | தொடங்கும் நாள் மற்றும் நேரம் | 29.07.2022 காலை 10:00 மணி |
| | முடியும் நாள் மற்றும் நேரம் | 02.08.2022 மாலை 05:00 மணி |

**வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு:**

1) தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL)வாயிலாக நடைபெறும் தொலைதூர மின்–வாக்களிப்பு முறையானது 02.08.2022 அன்று மாலை 5.00 மணியளவில் நிறைவு பெறும். தீர்மானத்தன் மீது ஒருமுறை செலுத்தப்படும் வாக்கு மீண்டும் மாற்றதக்கதல்ல.
2) காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்க தகுதி உள்ள ஒரு உறுப்பினர் தொலைதூர மின்–வாக்களிப்பு முறையில் வாக்களித்த பின்பும் மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் மகாசபை கூட்ட நாளன்று மீண்டும் வாக்களிக்க இயலாது.
3) காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில், தொலைதூர மின்–வாக்களிப்பு (remote e-Voting) முறையினை பயன்படுத்தி தீர்மானங்கள் மீது வாக்களிக்காத உறுப்பினர்கள் மட்டுமே மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்–வாக்களிப்பு (e-Voting) முறையில் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர்.
4) காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி மகாசபை கூட்டம் தொடங்குவதற்கு முப்பது நிமிடங்கள் முன்னதாக தங்களை இணைத்துக் கொள்ளலாம். காணொலி காட்சி வாயிலாக மகாசபைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் இணைந்து கொள்ளும் வசதியானது முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்படும்.
5) மகாசபை கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளுக்கும் மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் பட்டியலை இறுதி செய்யும் நாளான 27.07.2022–ம் நாளன்று அலுவல் நேர முடிவுக்கும் இடையில் வங்கியின் பங்குகளை வாங்கியதன் மூலமாக உறுப்பினராக உள்ளவர்கள், தொலைதூர / மின்–வாக்களிப்பு முறையில் வாக்களிப்பதற்கான பயனர் பெயரையும் (Login ID), கடவுச் சொல்லையும் (Password), kvb_sig@kvbmail.com அல்லது info@skdc-consultants.com அல்லது evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் பட்டியலை இறுதி செய்யும் நாளான 27.07.2022–ம் நாளன்று உறுப்பினராக அல்லாதவர்களுக்கு மகாசபை கூட்ட அறிவிப்பு என்பது ஒரு தகவலுக்காக மட்டுமே.
6) மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு நடைமுறைகளை வெளிப்படைத்தன்மையுடனும் உண்மையாகவும் நடத்துவதற்கு ஏதுவாக திரு. ஆர் கே பாபுலால், (FCS No. 5893), M/s. பாபுலால் யாசர் & அசோசியேட்ஸ் அவர்களை பரிசீலனை அதிகாரியாக வங்கியின் இயக்குநரவை நியமித்துள்ளது.
7) மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்யாத பங்குப்பத்திரம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் (Physical Share Certificate holders) தங்கள் வாக்கினை செலுத்துவதற்கான தேவையான பயனர் பெயர் (User id), மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியவற்றை பெற green@skdc-consultants.com அல்லது evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தங்களது folio எண், பெயர், சுயச்சான்று அளிக்கப்பட்ட பங்குப்பத்திரத்தின் நகல் (Front and Back side), வருமானவரி கணக்கு எண் அட்டை மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை தெரிவித்து பெற்றுக் கொள்ளலாம்.
8) மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்யாத பங்குகளை மின்னணு (Demat) முறையில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் வாக்கினை செலுத்துவதற்கான தேவையான பயனர் பெயர் (User id), மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியவற்றை பெற kvb_sig@kvbmail.com அல்லது evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தங்களது Demat கணக்கு எண் மற்றும் விவரங்கள் அடங்கிய Client Master List, சுயச்சான்று அளிக்கப்பட்ட வருமானவரி கணக்கு எண் அட்டை மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை தெரிவித்து பெற்றுக் கொள்ளலாம்.
9) மேலும் தொலைதூர மின்னணு (remote e-Voting) மற்றும் மின்னணு (e-Voting) முறையில் வாக்கு அளிப்பது தொடர்பான மேலதிக வழிமுறைகள் மகாசபை கூட்ட அறிவிப்பில் வெளியிப்பட்டுள்ளது.
10) தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை தொடர்பான சந்தேகங்கள் மற்றும் குறைகள் ஏதேனும் இருப்பின் உறுப்பினர்கள், திரு. சிவக்குமார் I, மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி, முதலீட்டாளர்கள் தொடர்பு பிரிவு (Investor Relations Cell), எண்: 20, ஈரோடு சாலை, வடிவேல் நகர், எல்.என்.எஸ்., கரூர் – 639 002 (தொலைபேசி எண்: 04324-269441; மின்னஞ்சல்: kvb_sig@kvbmail.com) அவர்களையோ அல்லது திரு. ஜெய குமார். K, மேலாளர், M/s. SKDC Consultants Ltd, பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர், (யூனிட்: கரூர் வைஸ்யா வங்கி), "சூர்யா", 35, மே பிளவர் அவென்யு, செந்தில் நகர் பின்புறம், சவுரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் – 641028. (தொலைபேசி எண்: 0422-2539835/836, 4958995; மின்னஞ்சல் : info@skdc-consultants.com) அவர்களையோ தொடர்பு கொள்ளலாம்.
11) Ms. Pallavi Mhatre, Senior Manager, NSDL, 4th Floor, 'A' Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Patel, Mumbai - 400 013. தொலைபேசி எண்: 1800 102 0990 / 1800 22 4430, மின்னஞ்சல்: evoting@nsdl.co.in என்ற முகவரியை தொடர்பு கொள்வதன் மூலமாக மின்–வாக்களிப்பு முறை தொடர்பான மேலதிக தகவல்களை உறுப்பினர்கள் பெறலாம்.

**பங்காதாயம் (Dividend) மற்றும் அதன் மீதான வரிப்பிடித்தம் குறித்த விவரம் (TDS on Dividend) :**

நடைபெற உள்ள மகாசபை கூட்டத்தில் பங்குதாரர்களின் ஒப்புதலுடன் தேவையெனில் சட்ட ஒழுங்குமுறை அமைப்புகளின் (Regulations) ஒப்புதலையும் பெற்று 31.03.2022 நாளன்று முடிவுற்ற நிதி ஆண்டிற்கான பங்காதாயமாக வங்கியின் ஒவ்வொரு இரண்டு ரூபாய் முகமதிப்பிலான சமஉரிமை பங்குகளுக்கும் Rs.1.60/- வீதம் வழங்க வங்கியின் இயக்குநர் அவை 20.05.2022 ஆம் தேதி அன்று நடந்த தனது கூட்டத்தில் பரிந்துரைத்துள்ளது.

நிதிச்சட்டம் 2020–ன் மூலம் வருமான வரிச்சட்டம் 1961ல் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களின்படி, 01.04.2020–இல் இருந்து நிறுமங்கள் அளிக்கும் பங்காதாயம் பங்குதாரர்களின் வரிவருமானத்திற்கு உட்பட்டதாகும். எனவே வங்கி அளிக்கும் பங்காதாயத்தில் இருந்து குறிப்பிட்ட விகிதத்தில் வரிப்பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது. வரிப்பிடித்தம் செய்யும் விகிதமானது பங்குதாரர்களின் குடியுரிமை நிலைப்பாடு (Residential Status) மற்றும் வரிப்பிடித்தம் தொடர்பாக வங்கிக்கு பங்குதாரர்கள் கொடுத்துள்ள ஆவணங்களை பொறுத்து மாறுபடும்.

வரி பிடித்தம் செய்வதிலிருந்து விலக்கு பெற தகுதியுள்ள பங்குதாரர்கள் அதற்கான படிவங்களை (Forms 15G/15H/10F/others) பூர்த்தி செய்து சுய சான்று செய்யப்பட்ட வருமானவரி கணக்கு அட்டையின் நகலுடன் சேர்த்து https://www.kvb.co.in/investor-corner/tds-on-dividend/ என்ற இணையதள முகவரி மூலமாகவோ அல்லது green@skdc-consultants.com என்ற முகவரிக்கு தங்களின் பதிவு செய்யப்பட மின்னஞ்சல் முகவரியில் இருந்து மின்னஞ்சல் செய்வதன் மூலமாகவோ அல்லது வங்கியின் பதிவு அலுவலகத்திற்கு அஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். வரி பிடித்தம் செய்வதிலிருந்து விலக்கு பெற தகுதியுள்ள பங்குதாரர்கள் அதற்கான படிவங்களை முறையாக பூர்த்தி செய்து 22.07.2022 தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

**மின்னஞ்சல் முகவரி, அலைபேசி எண், வருமானவரி கணக்கு எண், வங்கி கணக்கு மற்றும் KYC Documents பதிவு செய்யும் வழிமுறைகள் :**

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) 03.11.2021 & 14.12.2021ம் தேதியிட்ட சுற்றறிக்கைகளின் படி பங்குப்பத்திரம் வைத்திருக்கும் அனைத்து உறுப்பினர்கள் (Physical Share Certificate holders) தங்களுடைய வருமானவரி கணக்கு எண், வாரிசு நியமனம் (Nomination), முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, வங்கி கணக்கு விவரம், மாதிரி கையொப்பம் ஆகியவற்றை அதற்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள படிவங்கள் மூலம் (ISR-1, ISR-2, SH-13, etc.,) கட்டாயமாக 31.03.2023க்குள் பதிவுசெய்துகொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்ய தவறும் பங்குதாரர்களின் பங்குகள் மற்றும் பங்குப்பயன்கள் அனைத்தும் 01.04.2023 முதல் முடக்கி வைக்கப்படும். பரிந்துரைக்கப்பட்டுள்ள படிவங்களை வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரின் இணையதளத்திலோ (www.skdc-consultants.com →Investor Services →Downloads →General →Formats for KYC) அல்லது வங்கியின் இணையதளத்திலோ (www.kvb.co.in →Investor Corner →Share Holder FAQ) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எனவே, இதுவரை தங்களுடைய வருமானவரி கணக்கு எண், வாரிசு நியமனம்(Nomination), முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, வங்கி கணக்கு விவரம், மாதிரி கையொப்பம் ஆகியவற்றை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

**(i) பங்குப்பத்திரம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் (Physical Share Certificate holders) :** முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை (படிவம் ISR-1 ஐ மின்னஞ்சல் முகவரி, வருமானவரி கணக்கு எண், வங்கி கணக்கு எண் ஆகியவற்றை மாற்றுவதற்கும் அல்லது பதிவு செய்வதற்கும், படிவம் ISR-2ஐ பங்குதாரர்கள் தங்கள் மாதிரி கையொப்பத்தை மாற்றுவதற்கும் அல்லது பதிவு செய்வதற்கும், படிவம் SH-13ஐ வாரிசு நியமனம் செய்வதற்கும்) தேவையான ஆவணங்களுடன் இணைத்து வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரான M/s S.K.D.C. Consultants Ltd க்கு (Unit: The Karur Vysya Bank Ltd) "Surya" 35, Mayflower Avenue, Behind Senthil Nagar, Sowripalayam Road, Coimbatore – 641028 என்ற முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்

**(ii) பங்குகளை மின்னணு (Demat) முறையில் வைத்திருக்கும் உறுப்பினர்கள்:** மின்னஞ்சல் முகவரி மற்றும் பிற விவரங்களை தாங்கள் மின்னணு கணக்கு வைத்துள்ள முதலீட்டு பங்கேற்பாளரிடம் (Depository Participant) பதிவு செய்து கொள்ளலாம்.

இடம் : கரூர்
தேதி : 12.07.2022

**ஸ்ரீநிவாச ராவ் .M**
நிறுமச் செயலர்
தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்
(உறுப்பினர் எண் : ACS 19189)